
புரட்சிப்

# பெரியார் முழக்கம்



திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஆகஸ்ட் 24, 2023 • புரட்சி 23 • முழக்கம் 32 • விலை ரூ.3.00


# நாங்குநேரி ஜாதிவெறி : மதுரை வனவாசியில் கண்டன ஆர்ப்பாட்டம்

தலித் பள்ளி மாணவனையும் அவரது சகோதரியையும் வீடு புகுந்து வெட்டிய ஆதிக்க ஜாதி மாணவர்களைக் கண்டித்தும், தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெறும் ஜாதிவெறி வன்முறைகளைக் கண்டித்து கழகம் சார்பில் கண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மதுரை : நாங்குநேரி தலித் மாணவன் மீதான தாக்குதல் மற்றும் தென் மாவட்டங்களில் தொடரும் ஜாதிய வன்கொடுமைகள், ஆணவப் படுகொலைகளை கண்டித்து மதுரை மாவட்டக் கழகம் சார்பில் 17.08.2023 அன்று காலை 11 மணியளவில் மதுரை அண்ணா பேருந்து நிலையம் அருகிலுள்ள திருவள்ளுவர் சிலை முன் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மா.பா.மணிஅமுதன் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி முன்னிலை வகித்தார்.

கழக சிவவங்கை மாவட்டச் செயலாளர் பெரியார் முத்து, மேலூர் சத்ய மூர்த்தி, நிலக்கோட்டை வீரலட்சுமி ஆகியோர் தொடக்கவுரையாற்றினர்.

அதிமுக பொதுச்செயலாளர் பசும்பொன்.பாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச்செயலாளர் வெ.கனியமுதன், தமிழ்தேசியப் புலிப்படை தலைவர் ஆ.முத்துப்பாண்டி, தமிழ்புலிகள் கட்சி மாநில செய்தி தொடர்பாளர் முத்துக்குமார், ஐந்திணை மக்கள் கட்சி இணை ஒருங்கிணைப்பாளர் ஸ்டீபன், ஆதித்தமிழர் விடுதலைக் கட்சி அமைப்பாளர் விடுதலை வீரன், தமிழக வாழ்வுரிமை பாதுகாப்பு மக்கள் கட்சிதலைவர் மணிபாபா, புரட்சிகர இளைஞர் முன்னணி குமரன், ஆதித்தமிழர் பேரவை கலை இலக்கிய மாநில செயலாளர் செல்வம், தமிழ்தேச குடியரசு இயக்கம் மெய்யப்பன், சமத்துவ மக்கள் கட்சி மின்னல் வரதன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தில் முருகேசன்,கண்ணன் காமாட்சி, நிலக்கோட்டை விஜய் உள்ளிட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர். வேங்கை மாறன் நன்றி கூறினார்.

சேலம் : நங்கவள்ளி கிளைக் கழகத்தின் சார்பில் நாங்குநேரி பட்டியலின மாணவர் மீதான தாக்குதல் மற்றும் தமிழ்நாட்டில் தொடரும் ஜாதிய வன்கொடுமைகள், ஆணவப் படுகொலைகளை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டமானது 17.08.2023 வியாழன் அன்று மாலை 4 மணியளவில் வனவாசி பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கழக அமைப்புச் செயலாளர் ப. இரத்தினசாமி அவர்கள் தலைமை தாங்கினார். கழகத் தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈசுவரன் முன்னிலை வகித்தார்.

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு தொடக்கவுரை யாற்றினார். சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ.அன்பு, சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள், பகுஜன் சமாஜ் கட்சி மாவட்ட தலைவர் சந்தியூர் பார்த்திபன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு நங்கவள்ளி ஒன்றிய செயலாளர் ராசாத்தி, சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏற்காடு தேவா, வனவாசி நகர செயலாளர் பழ.உமாசங்கர், எடப்பாடி அருள்குமார் ஆகியோர் கண்டன உரையாற்றினர். நங்கவள்ளி சந்திரசேகர் நன்றி கூறினார்

நங்கவள்ளி கிருஷ்ணன், கண்ணன், அருள்குமார், பன்னீர்செல்வம், கதிர், செட்டியூர் மாரி, சந்திரசேகர், மேட்டூர் அம்ஜத் கான், திவாகர், பொட்டானேரி ரவிக்குமார், உள்ளிட்ட கழகத் தோழர்கள் ஆர்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை

## விநாயகர் சதுர்த்தியை காரணம் காட்டி நடக்கும் அத்துமீறல்கள்

*விநாயகர் சதுர்த்தி எனும் நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு (18.09.23) இந்துத்துவ அமைப்புகள் நீதி மன்ற ஆணைகளை கொஞ்சமும் மதிக்காமல், தமிழக அரசின் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆணைகளையும் காலில் போட்டு மிதித்தும், பொதுமக்களுக்கு பெரும் இடையூறுகளை விளைவித்தும், சிறு வியாபாரிகளை மிரட்டி வசூல் செய்வதும் என தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.*

*நீதி மன்றங்களை மதிக்காமல் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் வகையிலும், சுற்றுச்சூழலுக்கு பேராபத்துகளை விளைவிக்கும் வகையிலும் இந்த நிகழ்சியை இவர்கள் நடத்தி வருகிறார்கள்.*

*நீதிமன்ற ஆணைகள்,தமிழக அரசின் ஆணைகளை அமுல்படுத்தி கடமையாற்ற வேண்டிய காவல்துறை மற்றும் மாநில, மாவட்ட அரசு அதிகாரிகள் தொடர்ந்து தங்கள் கடமையை செய்யத் தவறுவது நீதி மன்ற அவமதிப்பாகும். இது மிகவும் கண்டிக்கத்தக்கது.*

*ஆகவே, காவல் துறை மற்றும் அரசு அதிகாரிகள் நீதிமன்ற மற்றும் தமிழக அரசின் ஆணைகளை நிறைவேற்றி அவர்களின் கடமைகளை தவறாமல் ஆற்ற வலியுறுத்தி மனுக்களை ஆணை நகல்களுடன் இணைத்து அவர்களுக்கு வழங்கி தங்கள் கடமையை தவறாமல் செய்யவும் இவற்றை மீறி செயல்படுவோர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்ள வேண்டுகிறோம்.*

*அந்தந்த மாவட்ட காவல் துறை, போக்குவரத்துத்துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், ஆட்சியர், வட்டாட்சியர், உள்ளாட்சித் துறை அலுவலகங்களில் மனுக்களை வழங்க கழக தோழர்களை கேட்டுக் கொள்கிறோம்.*

*மேலும் இந்த மனுக்களையும், ஆணை நகல்களையும் துறை சார் அலுவலங்களில் வழங்குவது நாளிதழ்களில் செய்தியாக வர ஆவண செய்யும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.*

*கழகத் தோழர்கள் அரசுத் துறைகளுக்கு வழங்க வேண்டிய விண்ணப்ப படிவ மாதிரிகள், நீதிமன்ற ஆணை ஆகியவை முகநூல் பக்கத்திலும், கழக வாட்ஸ்ஆப் குழுவிலும் பதிவிடப்பட்டுள்ளது.*

***– கொளத்தூர் மணி,***
***தலைவர்,***
***திராவிடர் விடுதலைக் கழகம்,***
***18.08.2023.***

## மேட்டுப்பாளையம், காவலாண்டியூரில் தெருமுனைக் கூட்டங்கள்

## திண்டுக்கல்லில் 25 தொடர் பரப்புரைக் கூட்டங்கள்




***சென்னை*** *: எது திராவிடம்? எது சனாதனம்? 15.08.2023 செவ்வாய் கிழமை மாலை 5 மணிக்கு, 59-வது கூட்டம் மயிலாப்பூர் முண்டக கன்னியம்மன் கோயில் அருகிலும், 60-வது கூட்டம், மாலை 7 மணிக்கு மயிலாப்பூர் அம்பேத்கர் பாலம், கழக தலைமை அலுவலகம் அருகிலும் நடைபெற்றது.*

*மனோகர், இராவணன், எட்வின் பிரபாகரன் ஆகியோர் தெருமுனைக் கூட்டத்தின் நோக்கம் குறித்து உரையாற்றினர்.*

*அடுத்ததாக நாத்திகன் – உமாபதி குழுவின் நையாண்டி நிகழ்ச்சி நடைபெற்றது.*

*மாலை 7 மணிக்கு அம்பேத்கர் பாலம் அருகில் நடைபெற்ற கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக 125 வட்டக் கழகச் செயலாளர் தவனேஷ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மதன், சமரன், வழக்கறிஞர் கார்த்திக் உள்ளிட்ட தோழமை கட்சியின் நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.*

*கூட்டத்தின் நிறைவாக மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, நாத்திகன், மனோகர், இராவணன், சிவா உள்ளிட்டோருக்கு பயனாடை அணிவித்து பாராட்டு தெரிவித்தனர்.*

***கோவை*** *: கோவை மாவட்டக் கழகத்தின் சார்பாக 12.08.2023 சனிக்கிழமை அன்று மேட்டுப்பாளையம் பேருந்து நிலையம், காரமடை ஆசிரியர் காலனி, திம்மம்பாளையம் புதூர், காரமடை டாக்ஸி ஸ்டேன்ட் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்றது.*

*இந்த கூட்டத்திற்கு மாவட்டக் கழகத் தலைவர் மேட்டுப்பாளையம் பா.இராமசந்திரன் தலைமை வகித்தார்.*

*13.08.2023 ஞாயிறு அன்று கன்னார்பாளையம், பெட்டதாபுரம், வீரபாண்டி, பெரியநாயக்கன் பாளையம் உள்ளிட்ட பகுதிகளிலும் இரண்டு நாட்கள் தொடர்ந்து எட்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது.*

*இந்த கூட்டத்திற்கு காளிபாளையம் கணேசு, புரட்சித்தமிழன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*புரட்சித் தமிழன் – கிருட்டிணன் பகுத்தறிவுப் பாடல்களை பாட, சூலூர் தமிழ்ச்செல்வி, நிர்மல்குமார், வெங்கட் ஆகியோர் நையாண்டி உரையாடல்*


தொடர்ச்சி 4 அம் பக்கம்

**தலையங்கம்**

## முதல்வரின் ஆக்கப்பூர்வமான அறிவிப்பும்; மோடியின் இறுமாப்பும்

*சுதந்திர நாளில் தேசிய கொடியை ஏற்றிவிட்டு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசிய பேச்சும், டெல்லி செங்கோட்டையில் பிரதமர் மோடி பேசிய பேச்சையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஓர் உண்மை நன்றாக புரியும். முதலமைச்சர் அடுக்கடுக்கான வளர்ச்சித் திட்டங்களை அறிவித்திருக்கிறார், மோடியின் பேச்சு வெற்று சவடாலாகவே இருந்தது. தமிழக முதலமைச்சர் 55,000 காலி பணியிடங்களை இந்த ஆண்டுக்குள் நிரப்பப்படும் என்று அறிவித்திருக்கிறார், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு பென்ஷன் தொகை உயர்த்தப்படும், மகளிர் உரிமைத் தொகை திட்டம் செப்டம்பர் 15ஆம் தேதி தொடங்கப்படும், மகளிருக்கான இலவச பேருந்து பயணத் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 50 லட்சம் பெண்கள் பயனடைகின்றனர். காலை சிற்றுண்டி திட்டம் மேலும் 31,000 பள்ளிக்கூடங்களில் விரிவாக்கப்படுகிறது, வாகனங்களின் மூலம் உணவு வழங்குகிற ஊழியர்களுக்கு நலவாரியம், ஆட்டோ ஓட்டும் பெண்களுக்கு மானியம் என்று அடுக்கடுக்கான ஆக்கபூர்வமான திட்டங்களை அறிவித்திருக்கிறார் முதல்வர்.*

*மோடியோ உலக நாடுகளில் இந்தியா ஒன்றாக அடுத்த மூன்று ஆண்டுகளில் இடம் பெறப் போகிறது. அடுத்த ஆண்டு சுதந்திர தினத்தில் நானே கொடியேற்றுவேன், மணிப்பூர் பெண்களுக்காக நாடே அவர்களின் பின்னால் நிற்கிறது என்றெல்லாம் வெத்து வேட்டு வாய்ச்சவடல்களை பேசியிருக்கிறார். அடுத்தமுறையும் நானே பிரதமர் என்று தனக்குத்தானே அறிவித்துக் கொண்டு, செங்கோட்டையில் கொடியேற்றுவது நான் தான் என்கிறார்.*

*விஸ்வகர்மா திட்டம் என்ற ஒரு திட்டத்தை மட்டும் அவர் அறிவித்திருக்கிறார். அதன் மூலம் நெசவாளர்கள், பொற்கொல்லர்கள், சலவைத் தொழிலாளர்கள் போன்ற பாரம்பரிய தொழில் புரிபவர்கள் பயன்பெறுவார்கள் என்று கூறியிருக்கிறார். குலத் தொழிலுக்கு ஒடுக்கப்பட்ட மக்களை மீண்டும் இழுத்துச் செல்லும் வர்ணாசிரம திட்டமே இது.*

*ஊழலற்ற ஆட்சியை அமைப்போம் என்று வாய்கிழிய பேசிக் கொண்டிருக்கிறார் மோடி. ஆனால் இவர்கள் ஊழலற்ற ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்களா? HCLP என்ஜின் தயாரிப்பில் ரூ.150 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. பரனூர் உட்பட்ட 5 சுங்கச்சாவடிகளில் கூடுதலாக ரூ.154 கோடி பொதுமக்களிடம் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. பிரதமரின் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சுமார் 7.5 இலட்சம் பேர் ஒரே தொலைபேசி எண்ணை இணைத்து மெகா மோசடியில் ஈடுபட்டது கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. இவையெல்லாம் ஒன்றிய தணிக்கை வாரியம் (CAG) வெளியிட்ட அறிக்கைகளாகும்.*

*உதான் திட்டத்தின் மூலம் 33 வழித்தடங்களில் இதுவரை விமான சேவை தொடங்கப்படவே இல்லை, ரூ.1089 கோடி செலவிட்டும் பல வழித்தடங்களில் இந்த விமான சேவை தொடங்கப்படவில்லை. பாரத் மாலா எனும் சாலை அமைக்கும் திட்டத்தின் மூலம் டெல்லி - அரியானாவை இணைக்கும் 29 கி.மீ துவாரகா எக்ஸ்பிரஸ் சாலை அமைக்கும் பணியில் சுமார் ரூ.6500 கோடி முறைகேடு நடந்துள்ளதாக ஒன்றிய தணிக்கை வாரியம் (CAG) அறிவித்திருக்கிறது.*

*தணிக்கை வாரியம் ஊழல் நடந்திருப்பதாகவே குற்றம்சாட்டியிருப்பதை கவனிக்க வேண்டும்.*

*இப்படி பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி நிற்கிறது மோடி ஆட்சி. சாதனைகளை பட்டியலிடுகிறது திராவிட மாடல் ஆட்சி.*

# பாஜக ஊழலற்ற கட்சியா? (3)

1) கடந்த ஆண்டு(2022) ஏலம் விடப்பட்ட 5 ஜி அலைக்கற்றை 4 இலட்சத்து 30 ஆயிரம் கோடி என நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில் 1 இலட்சத்தி 50 ஆயிரம் என மிக குறைந்த விலைக்கு விற்கப்பட்டிருக்கிறது. 2010 ஆம் ஆண்டு 2 ஜி ஏலத்தில் 1.76 இலட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக கூறினார்கள். ஆனால் 5 ஜி ஏலத்தில் கிடைத்ததே 1.50 இலட்சம் கோடி தான்.

2) ரபேல் போர் விமானங்களை வாங்கியதில் 40000 கோடி ஊழல் நடைபெற்றுள்ளது. மோடி அரசு 36 விமானங்களுக்கு 66,650 கோடி என விலையாக நிர்ணயித்தது. ஆனால் இதே 42 விமானங்களை 66,000 கோடிக்கு இந்தோனேசியா அரசு 2022 ஆம் ஆண்டு வாங்கியுள்ளது. 2007 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் 126 விமானங்கள் 55,000 கோடிக்கு செய்து தர ஒப்பந்தம் போடப்பட்டிருந்தது.

3) கடந்த 2020 கொரானா காலத்தில் மருத்துவ அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதில் எடியூரப்பா அரசு சுமார் 2200 கோடி அளவிற்கு ஊழல் செய்துள்ளது. மருத்துவ உபகரணங்களை அதிக விலை கொடுத்து வாங்கியுள்ளது என்று காங்கிரஸ் சார்பில் குற்றம் சாட்டப்பட்டது.

4) 2016 மற்றும் 2017- ஆம் ஆண்டுக்கான சத்தீஷ்கர் மாநில பட்ஜெட் நிதி 80,200 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்த நிதியில் 20 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்படவே இல்லை. இதை கண்டுபிடித்த பொதுக்கணக்கு தணிக்கைத்துறை அரசாங்கம் பொதுமக்கள் வரிப்பணத்தை தவறாக பயன்படுத்தியாக கண்டித்தது.

5) 2016-இல் முன்னாள் பா.ஜ.க. அமைச்சர் ஏக்நாத் காட்சே, தனது மனைவி பெயரிலும் மருமகன் பெயரிலும் மஹாராஷ்டிராவின் போஷாரி பகுதியில் சட்ட விரோதமான முறையில் நிலத்தை வாங்கியிருக்கிறார். அந்த நிலம் மஹாராஷ்டிரா தொழில்துறை மேம்பாட்டு நிறுனத்துக்கு சொந்தமானது. அன்றைய மார்கெட் விலை ரூ.40 கோடி என்று இருக்கும்போது வெறும் ரூ.3.75 கோடிக்கு இந்த நிலத்தை சட்ட விரோதமாக வாங்கியிருக்கிறார். அதை இலஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் அறிக்கையாக பதிவு செய்திருக்கிறார்கள்.

6) 2017 பண மதிப்பிழப்பு நடவடிக்கையின் போது, அமித் ஷா இயக்குனராக இருந்த, அஹமதாபாத் கூட்டுறவு வங்கியில் 5 நாட்களுக்குள் ரூ745.59 கோடி அளவிற்கு பணம் போடப்பட்டது. இதனால் பண மதிப்பிழப்பு விவகாரம் பாஜகவினருக்கு முன்கூட்டியே தெரிந்திருப்பதாக குற்றச் சாட்டுக்கள் எழுந்தன.

7) பாஜக ஆளும் மாநிலங்களான குஜராத் மாநிலத்தில் உள்ள கூட்டுறவு வங்கியில் 3118.51 கோடி சேமிப்பாக வைக்கப்பட்டது. மேலும், பாஜக ஆளும் மாநிலங்களில் மட்டும் மொத்தமாக 14293.71 கோடி கூட்டுறவு வங்கிகளில் சேமிப்பாக போடப்பட்டது. இது பாஜக தனது கருப்பு பணத்தை வெள்ளையாக மாற்ற கொண்டு வரப்பட்ட திட்டமாகவே பார்க்கப்பட்டது.


8) 2017 இல், விஜபி-கள் பயணிக்கும் விமானம் வாங்கியதில் 30 சதவீத கமிஷன் அதாவது 1.57 மில்லியன் டாலர் பணம் கொடுக்கப்பட்டதாக, சத்தீஸ்கர் மாநில முதல்வர் ராமன் சிங் மற்றும் அவரது மகன் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதனால் அரசுக்கு 65 கோடி இழப்பீடு ஏற்பட்டது.

9) சத்திஸ்கர் மாநிலத்தில் ராமன் சிங் (பா.ஜ.க.) தலைமையிலான அரசின் கீழ் ஏப்ரல் 2016 - மார்ச் 2017 வரை மட்டும், 74 கம்ப்யூட்டர்களை உபயோகித்து அரசின் 17 துறைகளுக்கு 1971 டெண்டர்களுக்கான 477 மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இதில் அரசு விதிகளை மீறியிருக்கிறது, 15.44 கோடிக்கான ஐந்து டெண்டர்கள் தகுதியில்லாத நபர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்று சி.ஏ.ஜி அறிக்கை வெளியிட்டது.

10) இராஜஸ்தானில் உள்ள பா.ஜ.க.வை சேர்ந்த வசுந்தரா ராஜே அரசு ஆகஸ்ட் 2014ஆம் ஆண்டு 17000 அரசு பள்ளிகளை ஒரேயடியாக மூடியது. இதனால் அதிகளவில் தனியார் பள்ளிகளில் சேர்க்கை அதிகமானது.

11) 2014-2015 இல் வருடத்திற்கு வெறும் 50,000 இலாபம் பெற்ற ஜெய்ஷாவின் நிறுவனம், மோடி ஆட்சி பொறுப்பேற்று ஒரு வருடத்திற்குப் பிறகு ஜெய்ஷாவின் நிறுவனம் 2015-16ஆம் ஆண்டில் 80 கோடிக்கு மேல் இலாபம், பெறும் நிறுவனமாக வளர்ந்தது.

12) மோடி பதவியேற்ற 2014 இல் மத்திய உள்துறை அமைச்சராக இருந்த கிரண் ரிஜ்ஜூ, 600 மெகா வாட் ஹைட்ரோ மின் திட்டம் கொண்ட இரண்டு அணைகளை கட்டுவதில் 450 கோடி ஊழல் நடைபெற்றது. ஊழல் செய்த நிறுவனம் கிரண் ரீஜ்ஜூவின் உறவினர். இதற்கு கிரண் ரிஜ்ஜூ உதவியுள்ளார்.

**புரட்சிப் பெரியார் முழக்கம்**

**ஆண்டு கட்டணம் - ரூ.300/-**

**5 ஆண்டு கட்டணம் - ரூ.1500/-**

**தொடர்புக்கு : 8973341377**

# கலைஞர் ‘சமத்துவபுரம்’ திட்டம்
# தொலைநோக்கு பார்வை கொண்டது

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை (3)

புரட்சியாளர் அம்பேத்கர் வெளிநாட்டில் சென்று படிப்பதற்காக பரோடா மன்னர் சாயாஜிராவ் அவர்களிடம் உதவி பெற செல்கிறார். மன்னர் அம்பேத்கர் அவர்களிடம் கேட்கிறார். நீ என்ன கேட்க விருப்பப்படுகிறாய், நான் சமூகவியல், பொருளாதாரம், மற்றும் பொது நிதி பற்றி படிக்கப் போகிறேன் என்றார். இந்த படிப்பை பயின்று என்ன செய்யப் போகிறாய் என்று மன்னர் கேட்டார். என்னுடைய படிப்பை என் சமுதாயத்தை, அவர்களின் மோசமான நிலையில் இருந்து மேம்படுத்தவும், அவர்களுக்கு வழி காட்டுவதற்கும், மேலும் சமுதாயத்தை சீர்படுத்த பயன்படுத்துவேன் என்றார். மன்னரிடம் கல்வி உதவிக் கேட்டு படிக்க சென்ற அம்பேத்கர் தன் நலனுக்காக பயன்படுத்தாமல் சமுதாயத்தை இப்போதைய நிலையில் இருந்து உயர்த்த முடியுமா என்பதை யோசித்து பயன்படுத்தினார்.

இதை நான் கலைஞருடன் பொருத்திப் பார்க்கிறேன், 14 வயது சிறுவன் ஆன கலைஞர், இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட போது, தங்களை இரண்டாம் தர குடிமக்களாக மாற்றி விடுவார்களோ என்ற கோபம் கலைஞருக்கு இருந்தது. அந்த கோபம் தான் பின்னாளில் மாநில சுயாட்சியாக உருவானது. அரசியலைப் பற்றி பிஸ்பார்க் என்பவர் சொல்வார், “Art of Possible” அதுதான் அரசியல் என்று இத்தாலியைச் சேர்ந்த பிஸ்மார்க் சொல்வார். சில மாற்றங்களை, கருத்துருவாக்கங்களை செய்ய வேண்டிய தேவை இருக்கும். அது இயக்கங்களுக்கு இல்லாத சிக்கல் தேர்தல் அரசியலில் இருக்கும் கட்சிகளுக்கு இருக்கிறது. ஆனால் அதை மாற்றியிருக்கிறார்கள், அண்ணா மாநிலங்களவையில் உரையாற்றுகிற போது “நாங்கள் தமிழ்நாடு கோரிக்கையை கைவிட்டு விடுகிறோம், ஆனால் காரணங்கள் அப்படியே தான் இருக்கிறது“ சொன்னார். காரணங்கள் அப்படியே இருக்கும் வரை கோரிக்கைகள் வரத்தானே செய்யும். எனவே அதற்கு மாற்றாக தான் அண்ணா இந்த கோரிக்கையை வைத்தார், கலைஞர் அதை வளர்த்தெடுத்தார்.

மாநிலங்கள் உரிமை என்று வருகிறபோது ஆண்டு தோறும் அரசு சார்பாக இரண்டு இடங்களில் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெறும். செங்கோட்டையில் குடியரசு நாளன்று குடியரசுத் தலைவரும், விடுதலை நாள் அன்று பிரதமரும் கொடியேற்றுவார்கள். உடனே கலைஞர் செங்கோட்டையில் குடியரசு நாளில் குடியரசுத் தலைவரும், விடுதலை நாளில் பிரதமரும் கொடியேற்றுகிறார்கள், ஆனால் மாநிலங்களில் மட்டும் இந்த இரண்டு நாட்களிலும் ஆளுநர்கள் மட்டுமே ஏன்? கொடியேற்றுகிறார்கள் என்று கேட்டார். அதன் பிறகு தான் இந்த முறை மாற்றப்பட்டது. விடுதலை நாளில் மாநில முதல்வர்கள் கொடியேற்றலாம் என்ற உரிமையை பெற்றுத் தந்தவர் கலைஞர்.

கலைஞர் தேசிய வளர்ச்சி குழு கூடிய போது ஒரு கோரிக்கையை வைத்தார். மாநில சுயாட்சி குறித்து பேசினார், குழுவை அமைத்தார், அறிக்கையை சமர்ப்பித்தார். இவையெல்லாம் யாரும் செய்யாத ஒன்று. நீதிபதி பி.வி.இராஜமன்னார் தலைமையில் குழுவை அமைத்து, அதில் கல்வியாளராக இருந்த லட்சுமண சாமி முதலியார், சந்திரா ரெட்டி ஆகியோரை உறுப்பினர்களாக நியமித்து அவர்கள் வகுத்த கொள்கையை ஒன்றிய அரசிற்கு அனுப்பி வைத்தார். மாநிலங்களவைக்கு என்ன பொருள்? மாநிலங்கள் தங்கள் கருத்துக்களை சொல்வதற்கான ஒரு இடம். அங்கு சிறிய மாநிலத்திற்கு ஒரு இடம், பெரிய மாநிலங்களுக்கு 10 இடம் என்றால் அங்கே நாங்கள் என்ன கருத்து சொல்லி வெற்றி பெறப் போகிறோம். எல்லா மாநிலங்களுக்கும் சம எண்ணிக்கையில் மாநிலங்களவை உறுப்பினர்கள் இருக்க வேண்டும். இதை கலைஞர் கோரிக்கையாக வைத்த போது பல்வேறு மாநில முதல்வர்கள் இந்த கருத்தை ஆதரித்து பேசத் தொடங்கினார்.

அம்பேத்கர் இறுக்கமான மத்திய அரசு என்று உரையாற்றினார். முதன் முதலில் அரசியலமைப்பு அவையில் அம்பேத்கர் பேசும் போது வலுவான ஒரு மத்திய அரசு வேண்டும் என்று தான் பேசினார். பின்னர் தன் கருத்தை மாற்றிக் கொண்டார். பெரியாருக்கும் அம்பேத்கருக்கும் சிறு சிறு வேறுபாடு உண்டு, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, பட்டியல் இன மக்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுங்கள், அதுவும் ஊருக்குள் கட்டிக் கொடுங்கள் என்று பெரியார் சொன்னார். சிறிய இடமாக இருந்தாலும் அடுக்குமாடிகளாக கட்டிக் கொடுங்கள் என்றார். ஆனால் அம்பேத்கர், எங்களுக்கு தனியாக வீடு கட்டிக் கொடுங்கள், நாங்கள் ஒரே இடத்தில் குவிந்திருந்தால்தான் பாதுகாப்பாக இருப்போம் என்று தனது பார்வையில் பேசினார்.

கலைஞர் சமத்துவபுரங்களைக் கட்டினார். பெரியார், அம்பேத்கர் ஆகிய இரு தலைவர்களின் கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டு ஊருக்குள் கட்டி, 40 விழுக்காடு இடங்களை பட்டியலின மக்களுக்கு ஒதுக்கினார் கலைஞர். இதை எளிதாக நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது, இந்த சமத்துவபுரங்கள் காலப்போக்கில் மாற்றங்களை ஏற்படுத்தும். இது எதிர்காலத்தில் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை குறித்து 50 ஆண்டுகள் கழித்து வரலாற்று ஆய்வாளர்கள் எழுதக்கூடும்.

சுயமரியாதை இயக்கம் என்ன மாற்றத்தை தந்தது என்று யார் யாரோ எழுதுகிறார்கள். திமுக வெற்றி பெற்று ஆட்சிக்கு வருவதற்கு முன்பே ஒருவர் 'திராவிடியன் இயர்ஸ்' என்ற ஒரு புத்தகத்தை எழுதுகிறார். இதை எழுதியவர் ஒரு ஐஏஎஸ் அதிகாரி அதுவும் பார்ப்பனர். அப்போது திமுக ஆட்சிக்கு வந்த 1967இல் திராவிட இயக்கத்தின் எதிர் கருத்து கொண்டவர்கள் தான் நிர்வாகத்தில் அமர்ந்து கொண்டிருந்தார்கள். நீதிக் கட்சி ஆட்சி காலத்தில் வகுப்புவாரி உரிமை பிரதிநிதித்துவம் கொண்டு வந்த போதும் இதே சிக்கல்தான்.

கலைஞர் கொண்டு வந்த மிகப் பெரிய மாற்றம் என்பது உயர் அதிகாரிகளின் எண்ணிக்கையில் மாற்றத்தை கொண்டு வந்தார். யாரெல்லாம்பார்ப்பனர்களால்ஏமாற்றப்பட்டு,வஞ்சிக்கப்பட்டு இருந்தார்களோ அவர்களை எல்லாம் உயரதிகாரிகளாக ஆக்கினார் கலைஞர். இந்த மாற்றம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதற்கு பிறகுதான் தமிழ்நாடு முன்னேற தொடங்கியது என்று எழுதினார்கள்.

கலைஞரின் ஆட்சிக்காலத்தில் 1975 ஆம் ஆண்டு நடைபெற்ற குரூப் 1 தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் உயர்சாதியினர் ஒருவர் கூட இல்லை, 112 பேர் குரூப்-1 சர்வீஸ் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் அத்தனை பேரும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின வகுப்பைச் சார்ந்தவர்கள் தான். அது மட்டுமல்லாமல் இதுவரை பதவி வாசனையையே அறியாத ஜாதியை சேர்ந்தவர்களை பணியில் அமர்த்தினார் கலைஞர். கல் உடைப்பவர்கள், சவரம் செய்பவர்கள், சலவை செய்பவர்கள், குறவர்கள் என மிகவும் ஒடுக்கப்பட்ட ஜாதியை சேர்ந்தவர்களை தேர்ந்தெடுத்தார்கள். இது எவ்வளவு பெரிய மாற்றம்.

இனிமேல் இந்த மதத்தை விட்டு வெளியே போ என்ற கருத்திற்கு இருவரும் வருகிறார்கள். 1935-இல் பெரியார் ‘சபாஷ் அம்பேத்கர்!’ என்று விடுதலையில் தலையங்கம் எழுதுகிறார். அப்போது சுதேசமித்திரனில் ‘ மூக்கு மயிர் பிடுங்கினால் ஆள் பாரம் குறைந்து விடுமா? என்று கிண்டலாக எழுதப்பட்டது. இதை பேசிய பிறகு சில நாட்களில் ஒரு விபத்துக்கு உள்ளாகிறார் அம்பேத்கர். அப்போது மிகவும் பதறிப் போனார் அம்பேத்கர், அருகில் இருப்பவர்கள் கேட்டபோது, நான் இறந்து போயிருந்தால் இந்துவாக அல்லவா இறந்திருப்பேன், எனக்கு அதுதான் வருத்தம் என்று கூறினார்.

கடைசியாக பாகிஸ்தான் பிரிவினை பற்றி ஒன்றை எழுதினார். எந்த பாடுபட்டாவது இந்து ராஜ்ஜியம் அமைவதை தடுத்தாக வேண்டும். பாகிஸ்தான் இஸ்லாமிய ராஜ்ஜியமாக போய்விட்டாலும் இந்தியா இந்து ராஜ்ஜியமாக அமைந்து விடக்கூடாது. அது மதச்சார்பற்ற அரசாக அமைய வேண்டும். இந்து ராஜ்ஜியம் அமையுமேயானால் அது சந்தேகத்திற்கு இடமில்லாமல் இந்த நாட்டிற்கு பெரும் ஆபத்தாகவே இருக்கும். இந்து தத்துவம் என்பது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றிற்கு எதிராகவே இருக்கும். அந்த வகையில் அது ஜனநாயகத்திற்கே ஒவ்வாத ஒன்றாகும். என்ன விலை கொடுத்தாவது இந்து ராஜ்ஜியம் அமைவதை தடுத்தாக வேண்டும் என்று எழுதினார் அம்பேத்கர்.

தொடரும்

## நீட் எதிர்ப்பு போராட்டம் :
## சென்னையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்றார்



திமுக இளைஞரணி - மாணவரணி - மருத்துவர் அணி சார்பில் நீட் தேர்வுக்கு எதிராக உள்ள ஆளுநரைக் கண்டித்தும்- ஒன்றிய அரசை கண்டித்தும் தமிழ்நாடு முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்த போராட்டத்திற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை தாங்கினார்.

போராட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்று உரையாற்றினார். உச்ச நீதிமன்றத்தில் செல்லாது என அறிவிக்கப்பட்ட நீட் தேர்வை மீண்டும் கொண்டுவர நடந்த சதிகளை கழகத் தலைவர் விளக்கினார். வழக்கை விசாரித்த மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வில் இரண்டு நீதிபதிகள் செல்லாது என்று அறிவித்தனர். அனில் தவே என்ற நீதிபதி மட்டும் மாறுபட்ட தீர்ப்பை வழங்கினார்.

இந்திய மருத்துவ கவுன்சில் செல்லாது என்று தீர்ப்பு வழங்கிய இரண்டு நீதிபதிகள் பதவி ஓய்வு பெறும் வரை காத்திருந்து செல்லும் என்று அறிவித்த அனில் தவே என்ற நீதிபதியின் முன் உரிய சட்டரீதியான நடைமுறைகளை பின்பற்றாமல் நீட் அனுமதிப்பெற்றனர். இந்த சதி வரலாற்றை கொளத்தூர் மணி சுட்டிக்காட்டினார்.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# ஆளுநருக்கு உதயநிதி சவால்!

நீட் விலக்கு கோரி நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார். அப்பொழுது பேசிய அவர்; 21 தற்கொலைகளும் கொலையே, இதை செய்தது ஒன்றிய பாஜக அரசு. ஒவ்வொரு மாவட்டத்திலும் 8000 முதல் 10,000 பேர் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர். ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு என்ன அதிகாரம் உள்ளது. ஆளுநர் ரவி என்ன மக்கள் பிரதிநிதியா என்று அமைச்சர் உதயநிதி கேள்வி எழுப்பியுள்ளார். நீட் மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க மாட்டேன் என்று கூற ஆளுநர் ரவி யார்?. போராட்டத்தில் பங்கேற்றால் அமைச்சர் பதவி பறிபோகும் என்று சிலர் கூறினார்கள்.

அமைச்சர் பதவி பற்றி எனக்கு கவலை இல்லை. உண்ணாவிரதப் போராட்டத்தில் அமைச்சராகவோ, எம்.எல்.ஏ.வாகோ பங்கேற்கவில்லை. உங்களின் சகோதரனாக வந்துள்ளேன். நீட் தேர்வால் உயிரிழந்த 21 மாணவர்களின் சகோதரனாக உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்றேன். நீங்கள் ஆளுநர் ரவி அல்ல, ஆர்.எஸ்.எஸ். ரவி என்று கூறியுள்ளார். மாணவர்களுக்காக எதையும் இழக்கத் தயார். நீங்கள் ஆளுநர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, தேர்தலில் நின்று வெற்றி பெற தயாரா? என அமைச்சர் உதயநிதி சவால் விடுத்துள்ளார். ஆர்.எஸ். எஸ். சித்தாந்தங்களை தமிழ்நாடு மக்களிடம் சொன்னால் காலணியால்” அடித்து விரட்டிவிடுவார்கள் என்று அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆளுநரிடம் நேருக்கு நேர் கேள்வி கேட்ட அம்மாசியப்பன் நடவடிக்கை எடுக்க பாஜகவினர் புகார் அளித்துள்ளனர். அம்மாசியப்பன் வேலைக்கு ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் நாங்கள் சும்மா விட மாட்டோம். நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிப்பதற்கான முழு நடவடிக்கைகளையும் முதலமைச்சர் மேற்கொண்டு வருகிறார். நீட் விலக்கு மசோதாவுக்கு ஆதரவு அளிக்காத ஒரே கட்சி பாஜகதான். மசோதாவை குடியரசுத் தலைவருக்கு மட்டும் அனுப்புவதுதான் ஆளுநரின் பணி. தகுதியற்ற நீட் தேர்வை என்றைக்கு ஒழிக்கிறோமோ அன்றைக்குதான் தமிழ்நாடு மாணவர்களுக்கு விடியல் கிடைக்கும்.

நீட் விலக்குக்கான இன்றைய போராட்டம் ஆரம்பம் மட்டுமே, இது முடிவல்ல. நீட் எதிர்ப்பு போராட்டத்தை அனைத்துக் கல்லூரி மாணவர்களும் முன்னெடுக்க வேண்டும். ஜல்லிக்கட்டுக்காக நடந்த போராட்டம் போல் மாணவர்களின் உயிரைப் பறிக்கும் நீட்டுக்கு எதிராகவும் போராட்டம் நடத்துவோம். நீட் தேர்வால் உயிரிழந்த மாணவர்களின் மரணத்தை ஒன்றிய அமைச்சர் எல்.முருகன் கொச்சைப்படுத்துகிறார். பொதுத்தேர்வில் அனிதா உள்ளிட்டோர் பெற்ற மதிப்பெண்கள் பற்றி தெரியாமல் எல். முருகன் பேசுகிறார்.

நீட் தேர்வை ஒன்றிய பாஜக அரசு ரத்து செய்ய வேண்டும் என்று அதிமுக மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்ற தயாரா?. தமிழ்நாட்டை பொறுத்தவரை பாஜக என்ற ஒரு கட்சியே தேவையில்லை. பிரதமர் வீட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த அதிமுக இளைஞரணி, மாணவரணியைச் சேர்ந்தவர்களை அனுப்ப தயாரா?. இல்லாத அதிகாரத்தை தனக்கு இருப்பதாக நினைத்துக் கொண்டு ஆளுநர் செயல்படுவதாக அமைச்சர் உதயநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

# உதயமாகிறது மற்றொரு “புரட்சி”

தமிழ்நாட்டில் புரட்சிக்கு பஞ்சம் இல்லை. இப்போது புரட்சி தமிழர் ஒருவர் மதுரையில் உதயமாகி இருக்கிறார். நீட் தேர்வில் ஸ்டாலின் மக்களை ஏமாற்றிவிட்டார் என்று பேசுவார். அவர் முதல்வராக இருந்த காலத்தில் நீட் தேர்வுக்கு குடியரசு தலைவர் ஒப்புதல் தர மறுத்து கடிதம் எழுதியதை ஒரு வருடம் வரை வெளியிடாமல் மக்களை ஏமாற்றியது. அதுதான் புரட்சி.

முத்தலாக் தடைச் சட்டம் நாடாளுமன்றத்தில் வந்தால் அதை ஆதரித்து தனது கட்சி உறுப்பினர்களை வாக்களிக்க சொல்வார். ஆனால் மதுரை மாநாட்டில் இஸ்லாமியர்களுக்கு ஆதரவாக தீர்மானம் போடுவார். இதுதான் புரட்சி.

மோடி கொண்டுவந்த விவசாய சட்டத்தை ஆதரித்து அதன் நன்மைகளை விலாவாரியாக விளக்கி பேட்டியளிப்பார். பிறகு மோடியே விவசாயிகள் போராட்டத்திற்கு பணிந்து சட்டத்தை கிடப்பில் போடும் போது வாய் மூடி மவுனம் காப்பார். இதுதான் புரட்சி.

புதுவை யூனியன் பிரதேசத்திற்கு மாநில உரிமைக் கோரி மதுரையில் தீர்மானம் போடுவார். ஆனால் டெல்லி யூனியன் பிரதேசத்தில் அதிகாரத்தை பறித்து ஒன்றிய ஆட்சி சட்டம் போட்டால் ஆதரிப்பார். இதுதான் புரட்சி.

நீட் தேர்வு விலக்கு கேட்டு நாங்கள் தான் சட்டசபையில் தீர்மானம் போட்டோம் என்பார். இப்போது நீட் விலக்கு கோர வாய்ப்பே இல்லை என்று அந்தர் பல்டி அடிப்பார். இதுதான் புரட்சி.

அரசுப்பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு இடஒதுக்கீடு தந்தது எங்கள் ஆட்சி தான் என்பார். அதே அரசுப்பள்ளி மாணவர்கள் நீட் தேர்வில் வெற்றி பெற தனியார் பயிற்சி வகுப்புகளுக்கு பல லட்சம் செலவிட வேண்டியிருப்பது குறித்து வாய் திறக்க மாட்டார். இதுதான் புரட்சி.

இவரது கட்சி பெயரில் இருக்கும் திராவிடம் என்பதே ஒரு கற்பனை என்று ஆளுநர் ரவி பேசினால் வாயை மூடிக் கொள்வார். இதுதான் புரட்சி.

கலைஞர் ஆட்சியில் மதுக்கடைகள் மூடப்பட்டன. எம்ஜிஆர் ஆட்சிக்கு வந்த பிறகு தான் மீண்டும் மதுக்கடைகள் திறக்கப்ப ட்டன. ஆனால் கலைஞர் தான் மதுக்கடைகள் திறந்து இளைஞர்களை கெடுத்தார் என்று வாய் கூசாமல் பேசுவார். இதுதான் புரட்சி.

முதலமைச்சர் பதவியை லாட்டரி பரிசாக சசிகலாவிடம் இருந்து பெற்ற போது அவர் காலில் விழுந்து வணங்கியவர், பிறகு சசிகலாவை தனது கட்சியில் சேர்க்கமாட்டேன் என்று வீர வசனம் பேசுவார். இவர் முதல்வராக இருந்த போது உறவினர்களுக்கு காண்ட்ராக்ட் வழங்கியதில் ரூ.5000 கோடி ஊழல் நடந்ததை சி.பி.அய் விசாரிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்ட போது அதை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்று தடை வாங்கி தன்னை காப்பாற்றிக் கொண்டிருப்பவர். இதுதான் புரட்சி.

இப்படி எத்தனையோ புரட்சிகளை பட்டியலிடலாம். தமிழ்நாடு இதையெல்லாம் சகித்து கொண்டுதான் இருக்க வேண்டும்.

। ஆம் பக்க தொடர்ச்சி

நிகழ்ச்சியை நடத்தினார்கள்.

திராவிடர் கழக மாவட்டத் தலைவர் வேலுசாமி, மதிமுக நிர்வாகி குட்டையூர் கந்தசாமி, திமுக பிரதிநிதி மனோகரன், கழக முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, கோவை மாவட்டக் கழகச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி நிறைவுரையாற்றினார்.

அமுல்ராஜ், ராஜாமணி நன்றி கூற கூட்டம் நிறைவுபெற்றது.

பெரியார் உணர்வாளர்கள் ஜெகதீசன், கவிதா, பெரியார் உணவக உரிமையாளர் பிரபாகரன், நாய்க்கன்பாளையம் திமுக பிரமுகர் என்.ஆர். ராமசாமி, பகுத்தறிவாளர் கழகம் சுந்தரமூர்த்தி, கலைஞரிஸ்ட் வினேஷ்பாபு, சிபிஎம் மாதர் சங்க நிர்வாகி இராஜலட்சுமி, சிபிஅய் காரமடை நகரச் செயலாளர் சண்முகம், சிரிஜா, மாரிமுத்து, அறிவுமதி, அய்யப்பன், ரமேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கழக ஆதரவாளரான கலைஞரிஸ்ட் வினேஷ்பாபு, பரப்புரை வாகனத்திற்கான பெட்ரோல் செலவு மற்றும் இரண்டாம் நாள் உணவு ஏற்பாடுகளை முழுமையாக கவனித்துக் கொண்டார். முதல்நாள் உணவை காரமடை பெரியார் உணவக உரிமையாளர் பிரபாகரன் ஏற்பாடு செய்தார்.

**திண்டுக்கல் :** திண்டுக்கல் மாவட்ட கழகத்தின் சார்பாக 12வது கூட்டம் கீரனூரிலும், 13வது கூட்டம் பழனி தொப்பம்பட்டியிலும், 14வது கூட்டம் வாகரையிலும், 15வது புளியம்பட்டியிலும், 16வது கூட்டம் அமரபூண்டியிலும், 17வது கூட்டம் கணக்கன்பட்டியிலும், 18வது கூட்டம் பழைய ஆயக்குடியிலும், 19வது கூட்டம் ஓமளபுரத்திலும், 20வது கூட்டம் பழனி பால சமுத்திரத்திலும், 21வது கூட்டம் பழனி பேருந்து நிலையம் முன்பும், 22வது கூட்டம் பழனி உழவர் சந்தை அருகிலும், 23வது கூட்டம் பழனி பெரியார் திடலிலும், 24வது கூட்டம் பழனி மஞ்சநாயக்கன் பட்டியிலும், 25வது கூட்டம் போடுவார்பட்டியிலும் 13.08.2023 முதல் 19.08.203 வரை நடைபெற்றது.

பழனி நகர அமைப்பாளர் பெரியார், மீனா அம்பேத்கர், மாக்சிம் கார்க்கி சனாதன எதிர்ப்பு பாடல்களைப் பாடினார்கள்.

கூட்டத்தின் நோக்கம் குறித்து மாவட்ட இணையதளப் பொறுப்பாளர் ராஜா, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாக்சிம் கார்க்கி, மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

தமிழ்நாடு மாணவர் கழக பொறுப்பாளர் ஆயுதன் நன்றி கூறினார்.

**சேலம் :** 20.08.23 ஞாயிறு மாலை 7.00 மணியளவில் காவலாண்டியூர் கிளைக்கழக சார்பில் 14வது கூட்டம் ஈரோடு சென்னம்பட்டி பகுதியில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு கழக கொளத்தூர் ஒன்றிய பொறுப்பாளர் விஜயகுமார் வரவேற்புரையாற்றினார். ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திகசோதி தலைமையில், சமூக ஆர்வலர் தைரியமணி, சிவானந்தம் மற்றும் பரமேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழகம் தயாரித்துள்ள பெரியார், அம்பேத்கர், தி.வி.க. கடந்து வந்த பாதை ஆகிய காணொளிப் படங்களை பொதுமக்களுக்கு திரையிடப்பட்டது.

தொடர்ந்து சமூக ஆர்வலர்கள் தைரியமணி, சிவானந்தம், கழக தலைமைக்குழு உறுப்பினர் காவை.ஈசுவரன்,சித்துசாமி, இளவரசன் தமிழ்நாடு மாணவர் கழகம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இறுதியாக வி.சி.க. கொளத்தூர் ஒன்றிய துணைச் செயலாளர் தீனரட்சகன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் ஊர்பொதுமக்கள், கழகத் தோழர்கள் காவை கிளைச்செயலாளர் தங்கராசு, சந்தோஷ், சேகர், சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கூட்டத்தில் கலந்துகொண்ட தோழர்களுக்கு அப்பகுதியை சார்ந்த பரமேஸ்வரன் இரவு உணவு வழங்கினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : August 24, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran